# யூன் – 05 - திங்கள்

## புனித பொனிபஸ்

**மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதர் தம் அலுவல்களில் நீதியுடன் செயல்படுவர். திபா. 112:5**

## முதல் வாசகம் : தோபித்து 1 : 1 - 3 2 : 1 – 8

இது தோபித்தின் கதை. தோபித்து தொபியேலின் மகன் தொபியேல் அனனியேலின் மகன். அனனியேல் அதுவேலின் மகன் அதுவேல் கபேலின் மகன் கபேல் இரபேலின் மகன் இரபேல் இரகுவேலின் மகன் இரகுவேல் அசியேலின் குடும்பத்தினர், நப்தலி குலத்தைச் சேர்ந்தவர். தோபித்து அசீரியர்களின் மன்னரான எனமேசரின் காலத்தில் திசிபேயிலிருந்து நாடு கடத்தப்பட்டார். திசிபே வடகலிலேயாவில் ஆசேருக்கு வடமேற்கே தென்திசையில் காதேசு நப்தலிக்குத் தெற்கே, பெயேருக்கு வடக்கே உள்ளது. தோபித்தாகிய நான் என் வாழ்நாளெல்லாம் உண்மையையும், நீதியையும் பின்பற்றி வாழ்ந்துவந்தேன் .அசீரிய நாட்டில் உள்ள நினிவே நகருக்கு என்னுடன் நாடு கடத்தப்பட்ட என் உறவின் முறையாருக்கும், என் இனத்தாருக்கும் தருமங்கள் பல செய்து வந்தேன். சக்கர்தோன் ஆட்சியில் நான் வீடு திரும்பினேன். என் மனைவி அன்னாவும் என்மகன் தோபியாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டனர். வாரங்களின் விழாவான பெந்தெகோஸ்து திருவிழாவின்பொழுது எனக்காக நல்லதொரு விருந்து தயாரிக்கப்பட்டது. நான் உணவு அருந்த அமர்ந்தேன். விருந்தின்போது எனக்குப் பலவகை உணவு பரிமாறப்பட்டது. அப்பொழுது என் மகன் தோபியாவிடம், ”பிள்ளாய், நீ போய், நினிவேக்கு நாடு கடத்தப்பட்ட நம் உறவின் முறையாருள் கடவுளை முழுமனத்தோடு தேடும் ஏழை எவரையேனும் கண்டால், அவரை அழைத்துவா் அவர் என்னோடு உணவு அருந்தட்டும். நீ திரும்பிவரும்வரை நான் உனக்காகக் காத்திருப்பேன், மகனே” என்று கூறினேன். தோபியா எங்கள் உறவின் முறையாருள் ஏழை ஒருவரைத் தேடிச் சென்றான். அவன் திரும்பி வந்து, ”அப்பா” என்று அழைத்தான். நான், ”என்ன மகனே?” என்றேன். அவன் மறுமொழியாக, ”அப்பா, நம் ,னத்தாருள் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது சடலம் சந்தை வெளியில் எறியப்பட்டு அங்கேயே கிடக்கிறது” என்றான். உடனே நான் எழுந்து, உணவைத் தொடாமலே வெளியேறித் தெருவிலிருந்து சடலத்தைத் தூக்கிவந்தேன் கதிரவன் மறைந்தபின் அடக்கம் செய்யலாம் என்று அதை என் வீட்டின் ஓர் அறையில் வைத்தேன். வீடு திரும்பியதும் குளித்து விட்டுத் துயருடன் உணவு அருந்தினேன். ”உங்கள் திருநாள்களைத் துயர நாள்களாகவும் பாடல்களையெல்லாம் புலம்பலாகவும் மாற்றுவேன்” என்று பெத்தேலைக் குறித்து இறைவாக்கினர் ஆமோஸ் கூறிய சொற்களை நினைத்து அழுதேன். கதிரவன் மறைந்ததும் நான் வெளியே சென்று, குழி தோண்டிச் சடலத்தைப் புதைத்தேன். என் அண்டை வீட்டார், ”இவனுக்கு அச்சமே இல்லையா? இத்தகைய தொரு செயலைச் செய்ததற்காகத்தானே ஏற்கெனவே இவனைக் கொல்லத் தேடினார்கள். இவனும் தப்பியோடினான். இருப்பினும் இறந்தவர்களை மீண்டும் அடக்கம் செய்கின்றானே” என்று பழித்து உரைத்தனர்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்

## நற்செய்தி : மாற்கு 12 : 1 – 12

அக்காலத்தில் இயேசு அவர்களிடம் உவமைகள் வாயிலாகப் பேசத் தொடங்கினார், ”ஒருவர் ஒரு திராட்சைத் தோட்டம் போட்டுச் சுற்றிலும் வேலியடைத்து, பிழிவுக்குழி வெட்டி, ஒரு காவல் மாடமும் கட்டினார். பிறகு தோட்டத் தொழிலாளர்களிடம் அதைக் குத்தகைக்கு விட்டுவிட்டு நெடும்பயணம் மேற்கொண்டார். பருவகாலம் வந்ததும் அத்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து திராட்சைப் பழங்களைப் பெற்று வருமாறு ஒரு பணியாளரை அவர் அனுப்பினார். ஆனால் அவர்கள் அவரைப் பிடித்து நையப்புடைத்து வெறுங்கையராய் அனுப்பினார்கள். மீண்டும் அவர் வேறொரு பணியாளரை அவர்களிடம் அனுப்ப, அவரையும் அவர்கள் தலையில் அடித்து அவமதித்தார்கள். அவர் மேலும் ஒருவரை அனுப்ப, அவரையும் கொலை செய்தார்கள் அவர் வேறு பலரையும் அனுப்பினார். அவர்களுள் சிலரை நையப்புடைத்தார்கள் சிலரைக் கொன்றார்கள். இன்னும் எஞ்சியிருந்தவர் ஒருவரே. அவர் அவருடைய அன்பு மகன், தம்மகனை அவர்கள் மதிப்பார்கள் என்று அவர் நினைத்துக்கொண்டு இறுதியாக அவரை அவர்களிடம் அனுப்பினார். அப்பொழுது அத்தோட்டத் தொழிலாளர்கள், ”இவன்தான் சொத்துக்கு உரியவன் வாருங்கள் நாம் இவனைக் கொன்றுபோடுவோம். அப்போது சொத்து நமக்கு உரியதாகும்” என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள். அவ்வாறே அவரைப் பிடித்துக் கொன்று திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே எறிந்து விட்டார்கள். திராட்சைத் தோட்ட உரிமையாளர் என்ன செய்வார்? அவர் வந்து அத்தொழிலாளர்களை ஒழித்துவிட்டுத் திராட்சைத் தோட்டத்தை வேறு ஆள்களிடம் ஒப்படைப்பார். ”கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று. ஆண்டவரால் நிகழ்ந்துள்ள இது நம் கண்களுக்கு வியப்பாயிற்று” என்னும் மறைநூல் வாக்கை நீங்கள் வாசித்தது இல்லையா?” என்று அவர் கேட்டார். தங்களைக் குறித்தே அவர் இந்த உவமையைச் சொன்னார் என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டு அவரைப் பிடிக்க வழிதேடினார்கள் ஆனால் மக்கள் கூட்டத்துக்கு அஞ்சினார்கள் ஆகவே அவரை விட்டு அகன்றார்கள்“ என்றார்.

**தியானம்:** ஆண்டவர் இந்த உலகத்தை அதிகமாக நேசிக்கின்றார். தந்தையாகிய இறைவன் தன் அன்பை முழுமையாக வெளிப்படுத்த நினைத்தார். அதை எல்லா வழிகளிலும் வெளிப்படுத்தினார். ஆனால் முழுமையைக் காண முடியவில்லை. ஆகவே தன் ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பினார் .(யோவா:3 அதி.16) நம் வாழ்விலும் தம்முடைய அன்பை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். மனம் திருந்தி மனம்மாறி வா என்று அழைக்கின்றார். நம் பதில் என்ன? ஆண்டவர் ஒருநாளும் ஒரு பொழுதும் நம்மை இழந்து விட அவர் விரும்புவதில்லை. நாம் எப்பொழுதும் செல்லப்பிள்ளைகளாக இருக்க வேண்டுமென ஆசைப்படுகின்றார். நாம் இயேசுவைப் பிரதிபலிப்பவராக, சுமப்பவராக அழைக்கப்படுகின்றோம். இறைவார்த்தையின் வழியாக நமக்கு அழைப்புக் கொடுக்கப்படுகிறது. கேட்கின்ற மறையுரை வழியாக அழைப்பு கொடுக்கப்படுகிறது. நாம் பலரோடு இணைந்து இறை பகிர்வில் அமர்கின்ற பொழுது, செபிக்கின்ற பொழுது நமக்கு அழைப்பு கொடுக்கப்படுகிறது. நாம் தவறுகின்ற போது, தடுக்கிவிழுகின்ற போதும் நீ எழுந்து வா என்று அழைப்பு கொடுக்கப்படுகிறது. இதை உணர்ந்து வாழ இன்றைய இறைவார்த்தைகள் நம்மை தட்டி எழுப்புகின்றது .